III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.164/2019

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 19-08-2023

| | | | |
|---|---|---|---|
| Name | :கௌஷிக் | Caste | : |
| Father's/Husband's Name: | | Calling | : |
| Age | : | Religion : | |
| Village | : | Taluk: | |

**குறுக்கு விசாரணை**

முதல் வாதி சாந்தி நிர்மலா எனது தாயார். இரண்டாவது வாதி சங்கீதா விஸ்வேஷ்வர் எனது அக்கா. முதல் வாதி இவ்வழக்கு நிலுவையின் போது இறந்துவிட்டதால் 3 வது வாதியான ரிஷிகேசும் நானும் வாரிசுதார்களாக சேர்க்கப்பட்டுள்ளோம். முதல் பிரதிவாதிக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கிரைய பத்திரத்தை ரத்து செய்ய இவ்வழக்கில் பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது. மேலும் தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டி பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது. சுவாதீனம் ஒப்படைக்க வேண்டிய பரிகாரத்திற்கு முத்திரை கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரிதான். சுவாதீனம் எங்களிடம் உள்ளது. எங்களிடம் சுவாதீனம் இருக்கும் நிலையில் ஏன் சுவாதீனத்தை ஒப்படைக்க கேட்டுள்ளோம் என்றால் பின்னிட்டு தேவைப்படலாம் என்ற எண்ணத்தில் சேர்த்துள்ளோம். இரண்டாம் பிரதிவாதி எனது தாயாரின் அதிகாரம் பெற்ற முகவர். இரண்டாம் பிரதிவாதி முதலாவதியின் பொது அதிகாரம் பெற்ற முகவல் என்ற நிலையில் தாவா சொத்தை முதலாம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது தாயார் இரண்டாம் பிரதிவாதிக்கு விற்பனை செய்வதற்கான அதிகாரத்தை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமான வா.த.சா.2 தான் அந்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல். வா.த.சா.2 ல் விற்பனை தொகையை எனது

தாயாருக்கு கொடுக்கவேண்டும் என்று கண்டுள்ளது. வா.த.சா.2 ல் இரண்டாம் பிரதிவாதி கிரைய தொகை வாங்குவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயார் பெயரில் தான் கிரைய தொகை வாங்கவேண்டும் என்று வா.த.சா.2 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனது தாயாருக்கும் இரண்டாம் பிரதிவாதிக்கும் இடையே இருக்கும் பிரச்சனை தெரியாமல் முதலாம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. முதலாம் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதிக்கு வங்கி பரிவர்த்தனை மூலமாக தான் கிரைய தொகை செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். நாங்களும் 2 ஆம் பிரதிவாதியும் சேர்ந்து கொண்டு முதல் பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நாங்கள் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆதலால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.